உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௩	சருவசித்து—ஆடி	1947—ஜூலை	மலர் ௪

பல்கலைப் புலவர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் நடுகல் விழா.

சட்ட நூற்புலவர் தமிழ்ப் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, M. A., M. L., அவர்களைத் தமிழகம் நன்குணரும். எத்தகைய அருங்கலைகளையும் எளிதில் உணருந்திறன் தமிழ் மக்களின் சிறப்பியல்பாகும் என்பதனை ஏனையோர் உணர்ந்து போற்றும் வண்ணம் கூர்த்தமதியுடன் விளங்கிய தமிழறிஞர்களுள் முதற்கண் பாராட்டப் பெறுஞ் சிறப்பு நம் பிள்ளையவர்களுக்கு உரியதாகும். இவர்கள் ஆங்கிலம் தமிழ் என்னும் இருமொழித் துறையிலும் எம். ஏ. பட்டம் பெற்றார்கள். சட்டத்தேர்வில் இந்திய மாணவரெவரும் பாடமாகக் கொண்டு பயில்வதற் கஞ்சிய சொத்துரிமைச் சட்டப்பகுதியினை இவர்கள் தமக்குரிய பாடமாகக்கொண்டு, குறுகிய கால எல்லையிற் படித்து, எம். எல். பட்டத்தினைப்பெற்றதும், 1920 ஆம் ஆண்டில் குற்றங்களின் நெறிமுறைகள் (Principles of Criminology) என்னும் நூல் இயற்றிப் பதினாயிரம் வெண்பொன் பரிசிலுடன் தாகூர் சட்ட விரிவுரையாளர் என்னுந் தனிச் சிறப்பினைப்பெற்றதும் இவர்களது நுண்ணறிவின் மாட்சியினை நன்கு விளக்குவனவாம். இவர்கள் 1919 முதல் 1927 வரை சென்னைச் சட்டக் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்த காலத்தில் பழந்தமிழ் நூல்களையும் திருமுறைகளையும் நன்கு ஆராய்ந்து தமிழ் நாகரிகத்தின் மாண்பினைக் குறித்து ஆங்கிலத்திலும், தமிழிலும் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டு வந்தார்கள். பல வகையான இடையூறுகளுக்கிடையே இவர்கள் அஞ்சாது மேற்கொண்ட தமிழ்ப்பணி

இவர்களைச் சட்டக் கல்லூரிப் பதவியிலிருந்து விலகும்படி செய்தது என்பதனைத் தமிழ் மக்கள் நன்குணர்வர். சென்னை உயர்நீதி மன்ற நடுவராக வருவதற்குரிய தகுதியுடைய இவர்கள் யாவர்க்கும் அஞ்சாது உண்மையினை எடுத்துரைக்கும் இயல்புடைமைபற்றி இந்நாட்டில் பேணப்படாது புறக்கணிக்கப்பட்டார்கள் என்பதனைத் தமிழர்களில் ஒரு சிலர் நன்குணர்வார்கள். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஐந்தாண்டுகள் தமிழ்ப்பேராசிரியராக வீற்றிருந்து இவர்களாற்றிய தமிழ்த்தொண்டுகள் அறிஞர்களாற் பாராட்டத் தகுவனவாம். அங்கிருந்து இவர்கள் வகுத்துத்தந்த திட்டங்கள் பலவும் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாய் விளங்குகின்றன. ஆங்கில மொழியிற் கடல்போற் பரவியுள்ள புதிய கலை நலங்களையெல்லாம் நல்ல தமிழில் தெளிவாக மொழிபெயர்த்துத் தமிழ் நூற்பரப்பினை விரிவுசெய்ய வேண்டுமென்பதும் பண்டைத்தமிழ் மக்களின் அறிவுப் பிழம்பாகிய தொல்காப்பியம் சங்க விலக்கியம் மெய்கண்ட நூல்கள் என்பவற்றின் பொருள் நலங்களை யெல்லாம் ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து உலக மக்களுக்கு உணர்த்துதல் வேண்டுமென்பதும் பிள்ளையவர்களின் வாழ்க்கைக் குறிக்கோளாகும். இத்தகைய கடமையினைத் தம்முடையதாகக்கொண்டு இவர்கள் இயற்றிய ஆராய்ச்சி நூல்களும் ஆற்றிய விரிவுரைகளும் மிகப்பலவாம். ஒருவருடைய ஆதரவும் இன்றித் தமது உடைமையினையும் வாழ்க்கை நலன்களையும் இழந்து இவர்கள் ஆற்றிய தமிழ்த் தொண்டுகள் இக்காலத் தமிழக வளர்ச்சிக்கு அரண்செய்வனவாம்.

இங்ஙனம் தமிழர் முன்னேற்றங் கருதித் தளராதுழைத்து இறையருளிற் கலந்து மறைந்த புலமை வீரர் ஆகிய பல்கலைப்புலவர் கா. சு. பிள்ளையவர்களுக்குப் பழந்தமிழ் முறைப்படி வீரக்கல் அமைத்து அதன்கண் அவர்களுடைய பெயரினையும் வாழ்க்கையில் அவர்கள்செய்து போந்த தொண்டின் பெருமையினையும் எழுதி நினைவுக் குறியமைக்க வேண்டுமென்று திருநெல்வேலி தென்னிய தமிழ்ச் சங்கத்தார் பெரிதும் முயன்று வந்தார்கள். அவர்கள் மேற்கொண்ட நன் முயற்சியின் பயனாக 13—10—47 திங்கட்கிழமை மாலை திருநெல்வேலியில் புகைவண்டி நிலையத்தையடுத்த வெற்றி வளைவின் பக்கத்திலுள்ள நகரமன்றப் பூங்காவில் (Municipal Park)

கா. சு. பிள்ளையவர்களின் நடு கல்விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சென்னை மாநிலப் பொதுநலப் பணி யமைச்சர் உயர்திரு. மீ. பக்தவத்சல முதலியார், B. A., B. L., அவர்கள் பல்கலைப் புலவரவர்களின் பெயரும் பீடும் எழுதிய வீரக் கல்லினை நடும் விழாவினைத் தொடங்கி நிகழ்த்தினார்கள். (பிள்ளையவர்கள் நடுகல்லிற் பொறிக்கப்பெற்ற வாழ்க்கைக் குறிப்புக்களைப் பொழிலிற் பிறிதோரிடத்தில் பதிப்பிட்டுள்ளோம்.) தமிழறிஞர்களும் தமிழ்ச் செல்வர்களும் இவ்விழாவிற் கலந்து கொண்டு பிள்ளையவர்களின் தமிழ்த்தொண்டுகளைப் பாராட்டிப்போற்றினார்கள். பலவகை இன்னல்களுக்கிடையே தம் ஒளி மழுங்காது வீறுகொண்டு தமிழ் வளர்த்த தமிழ் உரவோராகிய பல்கலைப் புலவரது நடுகல் தமிழ் மக்கள் எல்லோருடைய உள்ளங்களிலும் தமிழ் மொழியின் உயர்வினையும் தமிழ்ப்புலவர்களின் புலமை மாண்பினையும் தமிழர் நாகரிகத்தினையும் ஒளிபெறவிளக்கும் நடுகல்லாகத் திகழ்வதாகுக! இவ்விழாவினைச் செவ்வையாக நிறைவேற்றிய தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தாரையும் ஆர்வமுடன் இவ்விழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்த தமிழ்ப் பெருமக்களையும் உளமாரப் போற்றுகின்றோம்.

(க. வெ.)

* * * *

வருந்துகின்றோம்.

நம் சங்கப்பேரன்பரும் வணிகப் பெருஞ்செல்வரும் ஆகிய திருவாளர் நே. அ. வர்த்தமான முதலியாரவர்கள் 14—10—47 மாலை இவ்வுலகவாழ்வை நீத்தமைகேட்டுத் திடுக்குற்றோம். முதலியாரவர்கள் பொதுநலப்பணிகளில் ஈடுபட்டுழைக்கும் அறவோராவர். தஞ்சை நகராண்மைக் கழக உறுப்பினராகவிருந்து தொண்டாற்றியவர். தஞ்சை மகாவீர ஜைனசங்கத் தலைவராகவும் நம் சங்க உறுப்பினராகவும் அமைந்து சமயத்தொண்டும் தமிழ்த்தொண்டும் ஆற்றியவராவர். நம் சங்கப்பணிக்கு ஆண்டுதோறும் பெரும் பொருள் உதவி, உறு துணையாயிருந்தார்கள். அவர்களையிழந்து வருந்தும் குடும்பத்தார்களுக்கு நமது சங்கத்தின் ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அவர்களது நல்லுயிர் அமைதியுறுவதாகுக.

பாரதியார் மண்டபத் திறப்பு விழா.

எட்டயபுரத்திற்றோன்றித் தாம் பாடிய சுவைமலிந்த செந்தமிழ்ப் பாடல்களால் தமிழகத்தில் உரிமை வேட்கையைக் கிளர்ந்தெழச் செய்த இக்காலத் தமிழ்ப்புலவர் சுப்பிரமணிய பாரதியார் அவர்களைத் தமிழ் மக்கள் எல்லோரும் நன்குணர்வர். வேதியர் மரபிற் பிறந்து, தமிழகத்தில் சமூகச் சீர்திருத்தங்களிலும், ஆங்கில ஆட்சியினை எதிர்த்து இந்நாடு விடுதலை பெற்றுத் தன்னரசு பெறுதற்குரிய உரிமைப் போரிலும் தளராதுழைத்த பெருமை வீரத்தமிழ்ப் புலவர் பாரதியார் ஒருவர்க்கேயுரிய தனிச் சிறப்பாகும். ஒரு நாடு உரிமை பெறுதற்கு அந்நாட்டின் தாய்மொழிப்பற்றே உறுதுணையாகும் என்னும் உண்மையினைப் பாரதியாரவர்கள் தெளியவுணர்ந்தார்கள். 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்துபாயுது காதினிலே, எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே' எனத்தொடங்கும் பாடலால் தாய்மொழி யுணர்ச்சியுடன் தாய் நாட்டு உரிமையுணர்வைத் தோற்றுவித்த தெளிவு பாரதியாரவர்களின் புலமைச் சிறப்பாகும். 'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை; வெறும் புகழ்ச்சி யில்லை' எனத் தமிழ் நாட்டுப்புலவர் பெருமக்களின் தனிமாண்பினை வடித்துணர்த்திய உறுதி பாரதியாரவர்களின் தமிழுள்ளத்தை நன்கு வெளிப்படுத்துகின்றது.

இந்த நாட்டுமக்கள் தமக்குரிய நாட்டில் அயலார்களுக்கு அடிமைகளாய், உரிமையிழந்து வாழும் இழிவினையும் இந்த நாட்டிற் பிறந்த தமிழ் மக்கள் வேற்றுநாடு சென்று கூலித்தொழில் செய்து துன்புற்று மடியுந் துயர்நிலையினையும் இடைவிடாது எண்ணிய பாரதியாரவர்களின் உள்ளத்தில் ஊறிப்பெருகிய துன்பவுணர்வின் தொகுதியே அவர்கள் அவ்வப்போது தம்மை மறந்து பாடிய நாட்டு விடுதலைப் பாடல்களாகும். பொதுமக்களுடைய உள்ளத்தில் எளிதாகப் பதிதற்குரிய சந்தப் பாடல்களையே பாரதியார் தம் கருத்தை விளக்குதற்குரிய கருவியாகக் கொண்டார். இவர் பாடலின் அமைப்பு பெரும்பாலும் தமிழ் நாட்டுச் சித்தர் பாடல்களின் சாயலினையடியொற்றியதாகும். தம் பாடல்களில் எல்லார்க்கும் எளி

திற் பொருள் விளக்கும் எளிய தமிழ்ச்சொற்களையே பெரும் பாலும் வழங்கியுள்ளமை இசையுடன் எல்லாரும் பாடியுணர்வு பெறுதற்குரிய கவர்ச்சியினைத் தருகின்றது. வடநாட்டவர் களும், தென்னாட்டவர்களும் ஒருங்கிருந்து உழைத்த உரிமைப் போரினை விளக்குந் திறத்தில் ஒரு சில வேற்றுமொழிகள் கலத்தல் இயல்பேயாகும். சங்கப் புலவர்கள் பாடிய பாடல் கள் யாவும் மக்களைப்பற்றிய செய்திகளையே விரித்துரைப்பன. ஆதலால், அப்பாடல்கள் யாவும் படிப்போர்க்கு மக்கள் வாழ்க் கையிற் காணப்படும் இன்ப துன்ப வுணர்வுகளைத் தோற்று வித்து, நாட்டுமக்களது நல்வாழ்வுக்கு அரண்செய்வனவாயின, தமிழ் மக்களது உரிமை சிதைந்த பிற்காலத்தே தோன்றிய பாடல்களிற் பெரும்பாலன வடமொழிப் புராண வழிகளைப் பின்பற்றித் தேவவுலகவாழ்க்கை முதலிய விளங்காப் பொருள் களையே புனைந் துரைக்கத் தொடங்கி, மக்களது பொதுவாழ் வுக்கு ஒரு சிறிதும் தொடர்பற்றனவாயின. மக்கள் வாழ் வினை வளம்படுத்துதலொன்றே கருதிய பாரதியாரவர்கள் சங்கவிலக்கியப் புலவர்கள் வரலாற்றைத் தெளிய வுணர்ந்து தமது விருந்துச் செய்யுளால் தமிழகத்திற்குப் புதிய உணர்ச்சி யினைக் கிளர்ந்தெழச்செய்த திறம் தமிழ் மக்களால் பெரிதும் பாராட்டத்தகுவதாம். இவ்வுண்மையினை இந்நாட்டிலுள்ள பல்வேறு கொள்கையினரும் நன்குணர்ந்து பாரதியாரவர் களைப் பாராட்டத்தொடங்கியது, எதிர்காலத் தமிழகத்தின் ஒற்றுமைத்திறத்தைப் புலப்படுத்துவதாகும், பாரதியாரவர் கள் உயிருடன் வாழ்ந்த காலத்தே அவரை யாவரும் ஆதரிக்க முன்வரவில்லை. பிறரது அடிமையாட்சியில் உணர் விழந்து உரங்குன்றிய தமிழ் நாட்டு மக்கள் அப்பணியினை நெகிழ விட்டமைக்கு அவர்கட்குத் தாய்மொழிப்பற்றின்மை யும் அயல்மொழி வேட்கையுமே காரணங்களாம் என்பதனை இன்று நாம் உரிமைபெற்ற காலத்தே தெளிவாக அறி கின்றோம்.

உரிமைபெற்ற தமிழகம் தன்னாட்டிற் பிறந்த தமிழ்ப் புல வனை ஓரளவு எண்ணிப் போற்றுதற்கு முன்வந்தது. உரிமை வாழ்வினைக் கனவுகண்டு பாடிய தமிழ்ப் புலவ ராகிய பாரதியாரவர்களுக்கு அவர் தம் பிறந்த ஊராகிய எட்டயபுரத்தில் நினைவுக் குறியாக மண்டபம் அமைத்து அவர் அறிவுறுத்திய சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புதல் வேண்டுமெனத் தமிழ் மக்கள் விரும்பினார்கள். அவ்விருப்

பத்தின் விளைவால் ஐம்பதினுயிரம் வெண்பொன்களை நன் கொடையாகத் திரட்டினுர்கள். எட்டயபுரத்தில் பாரதியா ரவர்களின் நினைவாகப் பெரும்பொருளைச் செலவிட்டுப் பாரதி மண்டபத்தைக் கட்டினுர்கள். இவ்வழகிய மண்டபத் தைத் திறந்துவைக்குந் திருவிழா 13—10—47 திங்களன்று எட்டயபுரத்தில் நிகழ்ந்தது. மேற்கு வங்காள மாநிலத்தின் ஆட்சி முதல்வர் மாட்சிமிக்க உயர்திரு. சக்கரவர்த்தி இராச கோபாலாச்சாரியாரவர்களும், சென்னை மாநில முதலமைச்சர் திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியாரவர்களும், தமிழ்ப் பேரா சிரியர் ச. சோமசுந்தர பாரதியாரவர்களும் பிற தமிழ்ச்செல் வர்களும் இவ்விழாவிற் கலந்துகொண்டு செந்தமிழ்ப் புலவர் சுப்பிரமணிய பாரதியாரவர்களின் தமிழ்த்தொண்டினையும், நாட்டுத் தொண்டினையும் போற்றியமுறை தமிழ் மக்களால் பெரிதும் பாராட்டத்தகுவதாம். பாரதியாரவர்களின் நினைவுக்குறியாகிய மண்டபம் எதிர்காலத் தமிழர் அரசியல் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வதாகுக!

(க. வெ,)

தமிழ்மொழி கற்கும் மாணவர்க்கு உதவி.

திருப்பாதிரிப்புலியூரில் வதிந்துவரும், திருக்கோவலூர் வட் டம் கிழக்கு மருதூர்த் திரு. கேசவ நாயுடு அவர்கள் மனைவியார் திரு. தாயம்மாள் அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்மட்டும் எடுத்துப் புலவர் தேர்வுக்குப் பயிலும் ஒரு மாண வப் பெண்ணுக்கு உதவிப் பொருள் தரவேண்டிப் பல்கலைக் கழகத்தாரிடம் ஐயாயிரம் வெண் பொற்காசுகள் முதற் பொரு ளாக வைத்துள்ளார்கள்.

இங்ஙனமே, மதுரைப் பெருந் திருவாளர் கருமுத்து. தியாக ராசச் செட்டியார் அவர்கள் தமிழ் (சிறப்பு) தேர்வுக்குப் பயி லும் மாணவர் ஒருவருக்கு உதவ வேண்டி ஐயாயிரம் வெண் பொற்காசுகள் தந்துள்ளார்கள்.

இவ்விரு பெருமக்களது வள்ளண்மையினையும், தமிழ்த் தாய்ப் பற்றினையும் பெரிதும் பாராட்டுகின்ருேம்.

மதிப்புரை.

முத்தி நிச்சயப் பேருரை.

முத்தி நிச்சயம் என்பது திருத்தருமபுர ஆதீன முதற்குரவராகிய குருஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் இயற்றப் பெற்ற சைவசித்தாந்த நூலாகும். இருபத்திரண்டு வெண்பாக்களாலியன்ற இந்நூல் சைவத் திருமுறைகளிலும் மெய்கண்ட நூல்களிலும் விளக்கப்பெற்ற வீடுபேருகிய அந்தமில் இன்பத்தின் இயல்பினை இதுவே பொருளென ஐயமற வெடுத்துரைப்பதாகும். 'சிவ வழிபாட்டினுல் மலம் நீங்கப்பெற்ற உயிர், தன் கண் அமைந்த இன்பத்தைத் தான் நுகர்தலே முத்தி நிலையாகும்' என்னும் கருத்துடன் சிதம்பரம் கண்கட்டி மறைஞான பண்டாரம் என்பார் இயற்றிய 'முத்தி நிலை' என்னும் நூலிற் கூறப் பட்ட பொருந்தாக் கொள்கையாகிய ஆன்மாநந்தவாதத்தினையும் ஏகதேச சிவ சமவாதக் கொள்கையினையும் மறுத்துரைத்து, மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார் முதலிய சைவ சமய சந்தான ஆசிரியர்களும் திருமுறையாசிரியர்களும் தாங்கள் அருளிய மெய்ந்நூல்களில் எதனை முத்தி நிலையென அறிவுறுத்தினுர்களோ அதனையே உண்மை முத்தியென இந்நூல் உறுதி செய்கின்றது. முதல் நூற்பொருளுக்கு முரண்படத்தோன்றிய நூலினை மறுத்துரைத்து முதனூற்பொருளை நிலைபெறச்செய்வது இந்நூலாதலின் இதனை 'எதிர் நூல்' என்னும் வகையுள் அடக்குவர். இந்நூலுக்குப் பேருரை வகுத்த ஆசிரியர் இந் நூலாசிரியர் அடிமரபில் வந்த வெள்ளியம்பலவாணத் தம்பிரான் என்பவராவர். குமரகுருபர சுவாமிகளின் மாணவராகவும் சிவப்பிரகாச சுவாமிகளின் ஆசிரியராகவும் விளங்கிய இம் முனிவர் தமிழ், ஆரியம் எனும் இரு மொழியிலும் நிரம்பிய புலமையுடையவராவர். மெய்ந்நூற்பயிற்சியும் தருக்க நூலறிவும் ஒருங்கு வாய்க்கப்பெற்றவர். இவர் தம் நூற்பயிற்சியின் தெளிவினை யுணர்தற்கு இவ்வுரை வாய்ப்புடையதாகும் என உணர்ந்து இதனைத் திருந்திய வுருவில் வெளியிட்டருளிய திருத் தருமபுர மகா சந்நிதானம் அவர்களின் தமிழ்த் தொண்டினையும் சமயத்தொண்டினையும் உளமாரப் போற்றுகின்ருேம். (க. வே.)

*   *   *   *   *

மகிழ்ச்சி.

தமிழும் தமிழர் வாழ்வும் செம்மைபெற்றுத் திகழுங் கருத்துடன் பல்லாண்டுகளாகப் புலமைப்பணி புரிந்துவந்த செந் தமிழ்ச் செல்வி யென்னுந் திங்களிதழ், உலகப்போர் நெருக்கடி காரணமாக இடையே சிலவாண்டுகள் வெளிவராதிருந்தமை தமிழ்ப்பணிக்கு ஒரு குறையாகவே தோன்றியது. அக்குறை நீங்க இவ்வாண்டு ஆவணித் திங்கள் முதலாக மீண்டும் செந் தமிழ்ச் செல்வி புதுநலம் பெற்று வெளிவரத் தொடங்கியது கண்டு பெரிதும் மகிழ்கின்ருேம்.

‘கா. சு.’

நடுகல்லிற் காணும் வரலாற்றுச் சுருக்கம்.

இந்நடுகல்

நுண்மாண் நுழைபுலச் செம்மல்

பல்கலைப் புலவர், வழக்குரைஞர் (அட்வகேட்)

கா. சுப்பிரமணிய பிள்ளை

5—11—88-ல் திருநெல்வேலியில் காந்திமதிநாத பிள்ளை, (பி. ஏ.) க்கும் மீனாட்சியம்மைக்கும் திருமகனாகப் பிறந்து; ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் எம். ஏ. பட்டமும்; சட்டக் கலையில் எம். எல். பட்டமும்; 1920-ல் குற்றங்களின் நெறி முறைகள் (Principles of Criminology) என்னும் நூலியற்றிப் பதினாயிரம் ரூபாப் பரிசுடன் தாகூர் சட்ட விரிவுரையாளர் பட்டமும் பெற்று; 1919 முதல் 1927 வரையில் சென்னைச் சட்டக் கல்லூரியில் பேராசிரியராகவும்; 1929 - 1930, 1940 - 1944 இவ் வைந்தாண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும் விளங்கி; 1926 - 32ல் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிக்குழு உறுப்பின ராகவும்; 1932 முதல் 1937 வரை நெல்லை நகராட்சி மன்ற உறுப்பினராகவும்; நெல்லையப்பர் கோயில் அறங்காப்பாள ராகவும்; அமர்ந்து, சீர்திருத்தங்கள் பல செய்து; மணி வாசக மன்றம் நிறுவி, மணிமாலை என்னும் தாளின்வழிப் பல கலைநூல்களை இயற்றி வெளியிட்டு, நூலாராய்ச்சியுடன் நால் வர் வரலாறுகள், சேக்கிழார், பட்டினத்தார், தாயுமானவர், குமரகுருபரர், சிவஞான முனிவர், மெய்கண்டார் வரலாறு கள், திருக்குறள் திருவாசகப் பொழிப்புரைகள்; தமிழிலக்கிய வரலாறு, தமிழர் சமயம், வானநூல், மெய்கண்ட நூல்களின் உரைநடை; நீதிநெறிவிளக்கம், சிவப்பிரகாசம் இவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்புகள்; இந்தியத் தண்டனைத் தொகுதி விரிவுரைகள் (Lectures on the Indian Penal Code) முதலிய நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களியற்றி, பல பேரவைகளில் தலைமைதாங்கிச் சொற்பொழிவாற்றித் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்த் தமிழ் மக்கட்குப் பல்லாற்றானும் பணி செய்து 30—4—1945ல் மனைவியாருடன் மக்கள் மூவரையும் பிரிந்து திருவருட்பேறெய்தியதை நினைந்து நிலைநாட்டப் பெற்றது.

வ. சுப்பையா பிள்ளை, அமைச்சர்.
தென்னிந்திய தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி.

தமிழ் மொழி வளர்ச்சி.

திரு. கோ. தியாகராசப் பிள்ளை, தஞ்சை.

தமிழ் மொழியை வளர்ப்பதற்கும், பெருக்குவதற்கும் நான்கே முறைகள் உள்ளன.

1. பழக்கத்திலிருக்கும் சொற்களை நழுவ விடாமை.
2. மறைந்த சொற்களைப் புகுத்தல் அல்லது பழக்கத்திற்குக் கொண்டுவருதல்.
3. பெயர் இல்லாத பொருள்களுக்கும், கருத்துக்களுக்கும் புதிய சொற்களைக் கண்டுபிடித்தல்.
4. பிற மொழிகளிலிருந்து கடன் வாங்குதல்.

1. பிற மொழிகளைக் கலந்து பேசுதலும், எழுதுதலும் மேன்மையெனும் கருத்து கற்றோரிடத்தில் மிகுதியாய் உள்ளதாலும், சுற்றுளாரின் பழக்கத்தாலும், ஏற்ற தமிழ்ச் சொற்களிருந்தும், பிறமொழிச் சொற்களைப் பயன் படுத்துவது பெருங் குறையாயிருக்கிறது.

எடுத்துக்காட்டு:

(அ) வீடு, இல்லம் என்னும் சொற்க ளிருக்க, கிரகம், House என்பவற்றைப் பயன்படுத்தல்.

(ஆ) ஒரு சொற்றடரைச் சொல்லும் பொழுது இரு மொழிச் சொற்களைப் பயன்படுத்தல். "நான் உங்கள் house பக்கம் ten o'clockகிற்குப் போனேன்; Light burn பண்ணவில்லை". மேல் காட்டியதை நான் நேரிலேயே கேட்டேன். இது தமிழ் மக்களுக்கு இழிவே தரும்.

2. மறைந்த சொற்களைப் புகுத்தல் அல்லது பழக்கத்திற்குக்கொண்டுவருதல் 'எழினி' என்னும்சொல் மறைந்துவிட்டது. ஒரு காலத்தில் வழங்கிய 'ஒரு முக எழினி', 'பொருமுக எழினி', 'மறைமுக எழினி' என்னும் சொற்களைத் தற்காலத்தில் கதவு, இடுக்கி முதலியவைகளுக்குப் பயன்படுத்தும் திரைகளுக்குப் பெயராக வழங்கலாம்.

Door Curtain, Window Curtain என்பவற்றுக்கு, கதவு எழினி, இடுக்கி எழினி, என வழங்கின் தமிழ் வளரும்.

3. பெயர் இல்லாத பொருள்களுக்கும், கருத்துக்களுக்கும் புதிய சொற்களைக் கண்டுபிடித்தல்.

சற்று 100 ஆண்டுகளுக்கு முன்னோ பின்னோ நம் நாட்டில் உருளைக் கிழங்கு, நிலக்கரி, மண் எண்ணெய், புகையிலை, மெழுகுதிரி, குண்டூசி வந்தன.

வடிவை நோக்கி Potatoes என்பதற்கு உருளைக்கிழங்கு எனவும், நிலத்தில் கிடைப்பதாம் coal என்பதற்கு நிலக்கரி எனவும், மண்ணுடன் கலந்தெடுக்கப்படும் எண்ணெய்க்கு மண்ணெண்ணெய் எனவும், புகைக்கப் படுவதாலே புகையிலை யெனவும், மெழுகுடன் கலந்தமைக்கப்பட்ட திரியை மெழுகுதிரி யெனவும், ஒரு முனையில் குண்டு உளதால் குண்டூசி யெனவும் பெயரிட்டனர்.

இதுபோன்று நாமும் சிறந்த முறையைத் தழுவிப் புதுச் சொற்களை ஆக்கவேண்டும்.

4. மேற்கூறிய முறையின்படி புதிய சொற்கள் இயற்ற முடியாவிடின், நம் நாட்டில் வழங்கும் பிற மொழிகளிலிருந்து கடன் வாங்குவதே நல்லது.

இக்கட்டுரையில் குறித்த நான்கு முறைகளில், முதலில் குறித்த முறையை ஒவ்வொரு தமிழனும் கடைப்பிடிக்க வேண்டும். ஏற்ற தமிழ்ச் சொற்களிருக்கும்போது பிற சொற்களைப் பயன் படுத்தல் இழிவு. நம் பெண் மக்களிடத்தில் இவ்வுணர்ச்சியைப் புகுத்தவேண்டும். இம்முறையைத் தழுவாத ஆசிரியரை அங்கிலேயிலிருந்து நீக்கவேண்டும்.

தமிழனிடத்தில் தமிழ் எவ்வளவு வளமுற்றிருக்கிறதோ அவ்வளவேதான் தமிழின் பெருமையும் வலிமையும் ஆகும்.

இரண்டாவதாகக் குறித்த முறையைப் பெருக்க நம் தமிழ்ப் புலவர்களும், கற்றோரும் முன்வரவேண்டும். இவர்களுக்கே முன் ஒரு காலத்திலிருந்து இப்பொழுது மறைந்து போன சொற்கள் நன்கு புலனாகும்.

—0—

அருட்டிரு. விபுலாநந்த அடிகளார்

தமிழ்ப் பொழில், துணர் உ௩, மலர் க, பக்கம் 24–37 இல் உள்ள விபுலாநந்த அடிகளார் வாழ்க்கை வரலாற்றில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக்கொள்ளல் இன்றியமையாத தாகும்:

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம், 20–9–37 இல், சென்னைப் பச்சையப்பன் கூடத்தில் கூட்டிய கலைச் சொல்லாக்க மாநாட்டில், அடிகளார் தலைமை வகித்து மிகச் சிறப்புடன் நடத்திய தன்றி, பின்னர்ப் பலநாள் வேலைசெய்து பூதநூல், வேதிநூல், கணக்குச் சொற்களைச் செப்பஞ்செய்து தந்தார்கள். அவற்றுள் வேதிநூல் (Chemistry) பொருள்களுக்கு அடிகளார் இயற்றிக் கொடுத்த சொற்கள் ஆங்கிலச் சொற்களுக்குமேல் எளிதாய், சுருக்கமாய், சமன்பாடுகளுக்கு (Equation) மிக ஏற்றதாய் விளங்குவது குறிப்பிடத் தகுவ தாகும். இஃதொன்றே அடிகளார் அருந்தமிழ்த் தொண்டைப் பெரிதும் போற்றற்குப் போதுமான தாகும். அவ்வேலை நடைபெறும்போது எளியேனும் உடனிருந்து அடிகளாருடன் கலந்து துய்த்த இன்பம் அளவிடற் பாலதன்றாகும்.

சாமி. வேலாயுதம் பிள்ளை, B.A., L.T., தலைமை யாசிரியர்,
நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி, திருவாரூர்,

பாரத சார வெண்பா

பாரத சார வெண்பா எனும் இச் சிறு நூல் இனிய எளிய நடையா லியன்றதாய், யாவரும் படித்துணருமாறு அருட்டிரு. வீர. சோமசுந்தர சுவாமிகளின் மாணவரான S. பெருமாள் சுவாமிகள் அவர்களால் பாடப் பெற்றது. சொல் நயமும், தொடை நயமும், பொருணயமும் பொருந்தப் பெற்றிருப்பதோடு, இக்காலத்தார் பாரதத்தில் காட்டும் குறைபாடுகளைத் தக்க காரணத்தோடு நீக்கிப் போற்றுமுறை கண்டு இன்புறத்தக்கது. மற்றும் கீதாசாரம் இதன்கண் அமைந்துள்ளது மிகவும் அழகமைந்த பகுதியாம். இந்நூலும் ஆசிரியரும் என்றும் நின்று தமிழகத்தை அணிசெய்வாராக.

வாக்கு மெளிதாய் வகுக்கு முறையெளிதாய்த்
தேக்குந் தமிழமுதந் தேர்ந்தவராய்—மீக்கூறும்
மாபா ரதஞ்சொற்றான் வெண்பாவா லிவ்வுலகில்
சாமிபெரு மாளவனே தான்.

இலந்தையடிக் கவுணியன்

அமுத நிலையம்,
சென்னை.

வித்துவான் R. S. சாம்பசிவ சர்மா,
Tamil Pandit, Madras Christian College School

தமிழ்க் கொடி

(திரு. அ. சண்முகசுந்தரம், B.A., கரந்தை.)

தமிழ்நாடு, மீண்டும் தமிழர்க் காகித் தன்னுரிமை பெற்று, தனி ஆட்சி நடத்தும் நாள் அண்மையிலுள்ளது. பண்டைத் தமிழ் நூல்களைப் பயின்று, தமிழர்கள் தங்கள் முன்னோர்கள் ஆட்சியின் மாண்பினை உணர்ந்து, விழிப் படைந்து, ஆண்மையும் வீரமுங்கொண்டு, ஆட்சி செலுத்த முனைந்து விட்டனர்.

ஆட்சி செலுத்தும் எந் நாட்டிற்கும் கொடி இன்றி யமையாத தன்றோ?

தமிழ்நாடு தமிழர்க்காயின், தமிழ்க் கொடி யாது? சேர சோழ பாண்டியர்கள் கொண்ட கொடி யாவை? தமிழர்களே! இதுபற்றிச் சிந்திக்க வேண்டாமா?

அசோகர் ஆட்சி செலுத்த முடியாத தமிழ்நாட்டிலே அசோகச் சக்கரங் கொண்ட கொடி தமிழ்க் கொடி யாகா தன்றோ?

சேர சோழ பாண்டியர்கள் முறையே வெற்றி வில்லை யும், வீரப் புலியையும், எதிர்த்துச்செல்லும் மீனையும் தனித் தனி அடையாளமாகக் கொண்டிருந்த போதிலும், தாம் பிற நாட்டார்க்குச் செய்தி தெரிவிக்கும் பொழுதும், மற் றைய இடங்களிலும், மூவர்க்கு முரிய பொது வில், புலி, கயல் என்னும் முழு அடையாளத்தையே தமிழ் நாட்டின் முத்திரையாக வழங்கி வந்திருக்கிறார்கள். அவர்கள் அரசி யல் இலச்சினையையே கொடியாகக் கொண்டிருந்தார்கள்.

இவ்வுண்மையினைப் பின்வரும் சிலப்பதிகாரச் சொற் றொடர்கள் முதலிய சான்றுகள் உறுதிப் படுத்தும்.

‘ விடர்ச்சிலை பொறித்த வேந்தன் வாழி ”

“ வில்லெழுதிய விமயத்தொடு
கொல்லி யாண்ட குடவர் கோவே ”

"வானவர் மருள மலைவிற் பூட்டிய"
"விற்றலைக் கொண்ட வியன் பேரிமயத்து"

என்ற சொற்றொடர்களால் சேரர்கள் வில்லைக் கொடியாகக் கொண்டிருந்தார்கள் என்பது விளங்கும்.

"உழைப்புலிக் கொடித்தே ருரவோன் கொற்றமொடு"

"கடவரைக ளோரெட்டுங் கண்ணிமையா காண
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன்யா ரம்மானை
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன்றிக் கெட்டுங்
குடைநிழலிற் கொண்டளித்த கொற்றவன்கா ணம்மானை
கொற்றவன் றன் பூம்புகார் பாடேலோ ரம்மானை"

"பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணுண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்"

என்ற சொற்றொடர்கள் சோழர்கள் புலியைக் கொடியாகக் கொண்டிருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்தும்.

"மீனக்கொடி பாடும் பாடலே பாடல்
வேப்பந்தார் நெஞ்சுணக்கும் பாடலே பாடல்"

என்ற சொற்றொடரிலிருந்து பாண்டியர்கள் மீன் கொடியினைக் கொண்டிருந்தார்கள் என்பதை அறியலாம்.

இம் மூவேந்தர்களும் விற் கயற் புலிக் கொடியைக் கொண்டிருந்தார்கள் என்பது பின் வரும் சான்றுகளால் அறியலாம்.

"தென்றமிழ் நன்னாட்டுச் செழுவிற் கயற்புலி
மண்டலை யேற்ற வரைக வீங்கென"

"மின்றவழு மிமயநெற்றியில் விளங்குவிற்புலி
கயல்பொறித்த நாள்"

"வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கற்
றென்குமரி யாண்ட செழுவிற் கயற்புலியான்
மன்பதை காக்குங்கோமான் மன்னன் றிறம்பாடி
மின்செ யிடை நுடங்க வாடாமோ வூசல்
விறல் விற்பொறி பாடி யாடாமோ வூசல்"

என்ற சொற்றொடர்களால் சேரர்கள் இம் மூன்றும் கொண்ட கொடியினைக் கொண்டிருந்தார்கள் என்பது விளங்கும்.

முதலாம் இராசராசரது ஆனைமங்கலச் செப்பேட்டில் அவனது ஆட்சிக் குட்பட்ட இடத்தில் வழங்குதற்குரிய அரசியல் இலச்சினை பொறிக்கப் பட்டுள்ளது. வேந்தர்கள் தம் ஆட்சிக்குரிய கொடியின் இலச்சினையையே அரசாங்க முத்திரையாகக் கொண்டிருந்தார்கள் என்பது சாளுக்கியர் வரலாற்றாலும் அறியலாம். இவ்வரசரும் கொடியின் இலச்சினையையே அரசாங்க முத்திரையாகக் கொண்டிருந் தார். இச்செப்பேட்டில் தமிழ் நாட்டிலுள்ள கொடியினை வரைவதற்குள்ள இலச்சினையின் நேர் சாயலைக் குறிக்கும் படம் பொறிக்கப் பட்டுள்ளது. (Epigraphia Indica, Vol. XXII.) இதிலிருந்து இடைக் காலச் சோழர்களும் விற் கயற் புலிக் கொடியைக் கொண்டிருந்தார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம்.

பாண்டியர்கள் இம்மூன்றுங் கொண்ட கொடியினைக் கொண்டிருந்தார்களென்பது

“ கயலெழுதிய விமய நெற்றியி
னயலெழுதிய புலியும் வில்லும்
நாவலந்தண் பொழின்மன்ன
ரேவல் கேட்பப் பாரர சாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன் ”

என்று வாழ்த்தப் பெறுவதால் விளங்கும்.

மேற் கூறியவாற்றால் மூவேந்தர்களும் இக்கொடியை இமய மலையில் பொறித்தார்கள் என்பதும் இனிது புலனா கின்றது.

பழந் தமிழ் உணர்ச்சியொடு வருங்காலத் தமிழக ஆட்சியை நிறுவ முயலும் தமிழறிஞர்கள், தமிழ் நாட்டி லுள்ள தமிழ்க் கொடி வரைவதற்கு முன், மேலே குறிப் பிடப்பெற்ற முதல் இராசராசனது ஆனைமங்கலச் செப் பேட்டை ஒப்பு நோக்குதல் நன்று.

பழந் தமிழ்க் கொடியினை நிலை நிறுத்தாது வேற்று நாட்டாரின் கொடியினை அல்லது வேறு கொடியினைத் தமிழ்க் கொடியெனக் கருதுவது பொருத்தமற்றதாகும்.

உள நூல்

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, திருவாரூர்.

மனப் பயிற்சி.

உடல் நூல் வல்லார், உடல் பயிற்சி பெறுவதனுல் தான் உறுதியுறும் என்று உரைப்பதைப் போலவே, உள நூல் வல்லுநரும், உளம் பயிற்சி செய்வதனுல் தான் உரமடையும் என்று இயம்புகின்றனர்.

உடற் பயிற்சி செய்து உடல் வன்மை பெற்ருன் ஒருவன், பல மக்கள் கூடி அசைக்க முடியாத பார முள்ள கருங்கல் அல்லது யானையை எளிதாகத் தன் உடலில் ஏற்று விளையாட்டாக வேடிக்கை காட்டுகின்ருன். இதைப் பார்த்த பலரும் வியப்பெய்துகின்றனர். ஆனுல், அவன் உடற் பயிற்சி பெறும்போது முதன் முதலில் யானையையோ கருங்கல்லையோ தூக்கி இருக்கமுடியாது. முறையாகச் சிறிது சிறிது கனமுள்ள பொருள்களைத் தூக்கிப், பின்னரே தான் யானையை எளிதில் ஏற்றும் ஆற்றல் பெற்றிருக்கின்ருன் என்பது அறிவுடையார்க்கு நன்கு தெரிந்ததே. இதேபோல, சிறிது சிறிதாக ஒவ்வொரு பொருளின் தன்மையையும் எண்ணி எண்ணி, மனமும் உரம் எய்துதல் வேண்டும். ஆராய்ந்து பார்க்காதவ னிடத்தில் ஒரு பொருளைப் பற்றிக் கூறினுல், சுமக்கும் ஆற்ற லில்லாமல் பெரிய மூட்டையைக் கண்டு பய மடைதல் போலப் பய மடைவான்.

ஆகாரங் கொண்டு உடல் வளர்ச்சி யடைதல்போல, ஆராயும் விஷயங்களைக் கொண்டுதான் மனம் வளர்ச்சி யடைய முடியும். உடல், உணவு குறையினுங் கூடினும் துன்புறுதல்போல, மனமும் ஆராய்தல் கூடின் வருந்தும். இதனை 'மிகினுங் குறையினு நோய் செய்யும்' என்ற திருக் குறளுக்கு, 'மன மொழி மெய்களாற் செய்யுந் தொழில்களை அவை வருந்துதற்கு முன்னே யொழிதல், இவை இங்ஙன மன்றி செய்யின், அவை தத்தம் நிலையி னில்லாவாய் வருத் தும் என்பதாம்' என விசேட வுரையில் பரிமேலழகர்

விளக்கமாக எடுத்து எழுதுவதால் தெரியவரும். மேலும், சுக்கிர நீதியில், மிகு நடை முதலியன விரைவில் கிழத் தன்மை உண்டாக்கும் என உடற்! பயிற்சியை மாத்திரங் கூறுது, மனப் பயிற்சி யாகிய கலை பயிலலும் அதிகப்படின் கிழத் தன்மை உண்டாகும் எனக் கூறி யிருத்தலால், மிகை யான மனப் பயிற்சி கூடாது என்பது பெறப்படும். ஒரே சுவை யுடைய பொருளை மிகுதியாக உண்ண முடியாது. பல் சுவைப் பொருளை மாற்றிக் கொடுத்தால், எப்பொழு தும் உண்ணும் உணவைக் காட்டிலும் சிறிது மிகினும் ஏற்றுக் கொள்ளுதல் போல, மன மாகிய வயிறு பல் சுவை நிறைந்த சரித்திரம், இலக்கியம், இலக்கணம், பொது நூல், இயற்கை நூல் முதலியவற்றை மாற்றிக் கொடுப்பின் ஏற்றுக் கொள்ளுதல் இயல்பாகும். விரைவில் மனம் சலிப்பு எய்தாது. இதனை யறிந்தே பள்ளியில் மாணவர்களின் மனம் களைப்பு ஏற்படாமல் பாடங்களை முறையாகக் குறிப்பிட்டு ஒழுங்கு படுத்தி வைத்திருக்கின் றனர்.

மக்களிற் சிலர், பலர் கூறும் பொருள்களைத் தம் மனத் தில் விரைவாக ஏற்றுக் கொள்வதுடன், அவரவர்களுக்குத் தக்கவாறு பதில் சொல்லித் தாங்கள் செய்து கொண்டிருக் கும் வேலையையும் பிழை யின்றி முடிக்கின்றனர். பலர் ஒருவர் கூறியதையே கேட்டுத் தெரிந்து கொள்ளாமல், தாங்கள் துன்பப்படுவதுடன், பிறரையும் துன்புறுத்து கின்றனர். இவற்றிற்குக் காரணம் மனப் பயிற்சி யுடை மையும், இன்மையுமே யாம்.

மனம் பயிற்சியால் தான் உரம் அடையும் என்பதும், முறையாகப் பயிற்சி செய்தல் இன்றியமையாதது என் பதும், மனத்திற்கு உணவு பயிற்சிதான் என்பதும், பயிற்சி கூடின் குற்றம் என்பதும், பயிற்சியை வேறுவேறு ஆகக் கொடுப்பின் களைப்பு விரைவில் அடையாது என்பதும், மனப் பயிற்சியால்தான் பலர் பல பொருள் கூறின் ஏற்றுக் கொள்ளும் இயல்பைப் பெற்றுள்ளார் என்பதும், இப் பிரிவால் தெரிய வருவனவாம்.

ஆற்றின் நீரேகுவணி.

த. பு. நவநீதகிருட்டினன், அண்ணுமலைநகர்.

நீரேகுவணி (Hydrology) பாற்பட்ட தெரியற் செய்கை யின் கையாறு பண்டே தொடக்கமான தொன்றும். அந் நாளிலேயே, மக்களில் பலர், முன்னுன தமது திரிதருதிற உயலைக் கைவிட்டனராயாகி, ஆற்ருேரங்களிலான படுகைப் பாங்கர்களில் வதிந்து வந்தவாறு நிலையுடைக் குடிமைப் பாங் குற்று வாழலாயினர். ஆற்றங் கரையில் ஊற்றமான நல் வாழ்க்கை வாய்ந்த மாந்தர், ஆற்று நீரைப் பாய்த்தலால் நிலத்து விளையுளைப் பெருக்கிக் கொள்ளலாம் எனக் காணலுற்று, அவ்வாறு செய்தற்கான வழிகளை ஆராய்ந்து அறியலாயினர். ஆகவே, நீரேகுவணியைப் பொறுத்த நடைமுறைச் செய்திகள் பல அஞ்ஞான்றே தெரிந்து கொள்ளப்பட்டன. காலப்போக்கில் அவ்வாருன செய்திகள் பெருந் தொகையினவாய்க் காணப் பெறலாயின. ஆயினும், அவை வினைச் செயல் முறையை யொட்டினவையாகவே இருந்து வந்தன. பதினெட்டாம் நூற் ருண்டின் துவக்கத்திற்குப் பின்னரே, அச் செய்திகள் திரட்டப் பட்டு விதி காணுதலான தெரியற் செய்கை முறையினுல் நிரலாக்கப்பட்டு வருவன. அவ் வழியே காணப்பெற்றுள்ள தெரிவுச் செய்திகள் சிலவற்றை இனிக் கூறுவோம்.

மேட்டினின்று பள்ளத்திற்கு நீரோட்டம் செல்லல் இயல்பானது என அனைவரும் அறிவார். அவ்வாறு மேலினின்று கீழாக நீர் இல்லற்கான பொருட்டு இவ்வுலகிலுள்ள பொருள் கள் யாவினுக்கும் பொதுவான தொன்றே. தக்கவாறு தாங்கப் படாமல் விடப்படும் பொருள் எதுவும் கீழே விழுவதாகும் என நாம் அறிவோம். அங்ஙனம் நிலத்தை நோக்கிப் பொருள்கள் இழுக்கப்படும்படி செய்வது, உலகின் பொருண்மையைப் பொறுத்த இராவண வலிமை (Gravitational Force) எனப் படுவது. நிலப்பரப்பினின்று ஏர்பான வைப்புக் களிலுள்ள பண்டங்கள் எல்லாம் இராவண வலிமையை யொட்டி ஒரு வகையான ஆற்றலுடையனவா யிருப்பன.

பொருணுவணே (Physics) முறையை யொட்டி 'ஆற்றல்' எனின் எதுவாம் என்பதைப் பற்றி ஈண்டு உரைத்தல் தகும். பண்டமொன்று அசைவின்றி நிலையாயிருப்பின் அதை இயக்க வாயினும், இயங்கிக்கொண்டுள்ள தொன்றை நிறுத்தவாயினும், இயக்கங் கொண்ட தொன்றின் விரைவினளவை மிகை யாக்க

வாயினும், குறைவாக்கவாயினும், 'வலிமை' (Force) என்றது உறுத்தப்படல் வேண்டும் எனக் காண்கிறோம். ஆகவே, 'வலிமை' என்றது பண்டமொன்றின் இயக்கவளவை மாற்றும் போக்கான உறுத்துகையொன்றும் (அசைவற்ற பண்டமொன்று சுன்னவளவான இயக்க விரைவினது) எனப் பொருணுவணை முறையில் விளக்கப்படும். வலிமை யுறுத்திக்கொண்டேயிருத்தலை யொட்டி பண்டமொன்றின் இயக்க விரைவினளவு நொடிக்கு நொடி வேற்றுய்க் கொண்டேயிருக்கும். அவ் வலிமையானது விரைவினளவை மிகையாக்கும் போக்கினதாயிருக்கலாம்; அன்றி குறைவாக்கும் போக்கினதாயிருக்கலாம். குறைவாக்கும் போக்கான வலிமையால் உறுத்தப்பட்டுக் கொண்டேயுள்ள பண்டமொன்றைக் கருதுவோம். அதன் விரைவினளவு நொடிக்கு நொடி குறைந்துவந்து பிறகு அப் பண்டம் நின்றுவிடும் வரை அதன் நடக்கையைக் காணுவோம். அந்நடக்கைக்கான பொழுது முழுதுமாக அஃது வலிமையை எதிர்த்து வந்தது; ஆகவே அதை எதிர்த்து வேலை செய்தது எனலாம். அவ் வேலையினளவு, நடக்கைப் பொழுதில், அப்பண்டம் இயங்கின சேய்மையி னளவால், வலிமையின் அளவானது பெருக்கப் படலையொட்டி பெறப்படும் அளவானது. நடக்கைப்பொழுதிற்கு முன், அப் பண்டமானது அவ்வளவையாள வேலையைச் செய்தற்கான தகை யுடனிருந்தது. அங்ஙனம் அது கொண்டிருந்த வேலை செய்தற் கான தகையே, அதன் 'ஆற்றல்' (Energy) எனப்படுவது. தொடக்கத்தில் அப்பண்டத்தின் இயக்க விரைவினளவு மிக்கதா யிருந்தது. அந் நிலைமையில் அதன் ஆற்றலின் அளவும் மிக்கதா யிருப்பதாகும். ஏனெனின், அது நிற்பதற்கு முன் இயக்கமாகக் கூடிய சேய்மையினளவு மிக்கதாயிருத்தலால், போகப் போக, அவ்வாறுன சேய்மையினளவு குறைந்து போதலால் ஆற்றலி னளவும் குறைந்து போவது. இறுதியில் இயக்கம் ஓய்ந்த நிலைமையில், ஆற்றலினளவு சுன்னமாகும். ஆகவே, இயங்கிக் கொண்டுள்ள பண்டமொன்று ஆற்றலுடையது என அறி கிறோம். அவ் வாற்றலினளவு இயக்க விரைவினளவைப் பொறுத்தது எனவும் காண்கிறோம். இவ் வகையான ஆற்றல் 'இகைப்புத்திறவாற்றல்' (Kinetic Energy) எனப்படும். வலிமை யுறுத்தப்படலை யொட்டி பண்டத்தின் இயக்க விரைவினளவு மிகையாகிக்கொண்டு வரும் நிலைமையில், பண்டத்தின் போக்குக்கு வலிமை துணை செய்வதாகும். ஆதலால், வலிமையானது வேலை செய்வதாகும்.

இனி, ஏர்பான வைப்பிலுள்ள பண்டமொன்று ஒருவகை யான ஆற்றலுடைத்து என நாம் மேலே கூறினதைக் கருதலாம். நில மட்டத்தினின்று உயர்ந்துள்ள இடத்திலமைந்த அப்பண்ட மானது நிலையாயிருத்தற்கான பொருட்டு, அது கீழே விழாமல்

தடுக்கப்பட்டபடி தாங்கப்பட்டிருத்தல் என்பதே. ஆதாரமில்லாமற்போயின், கிராவண வலிமைக்காட்பட்டு, அப்பண்டம் கீழே விழுவதாகும். அப்படி விழுங்கால், அது இயங்குவதாகும். அதை யொட்டி வேலே செய்யும் தகையுடையது. அதனுல் செய்யப்படயியன்ற வேலேயினளவு அதன் நிறையைப் பொறுத்த கிராவண வலிமையினளவால், அது நிலமட்டத்தினின்றுள்ள சேய்மையினளவானது பெருக்கப்படலே யொட்டி பெறப்படும் அளவினதாம். ஆகவே அது ஏர்புவைப்பிலுள்ளபோது, அவ்வளவையான வேலேயைச் செய்யும் தகையுடையது. எனவே, அது ஆற்றலுடனிருப்பது. இவ்வகையான ஆற்றல் இருப்புத் திறவாற்றல் (Potential Energy) எனப்படும்.

ஆகவே, மேட்டு நீரானது இருப்புத் திறவாற்றல் வாய்ந்ததாகும். மேற்றிணேயினின்று அஃது கீழ் வழியே பாயும்போது, இருப்புத் திறவாற்றல் இகைப்புத் திறவாற்றலாய் மாறிக் கொண்டே போகும். இகைப்புத் திறவாற்றலானது பலவித உராய்வு வலிமைகளே எதிர்த்து வேலே செய்ய உதவுகிறது. எனவே, நீரின் இருப்புத் திறவாற்றலானது உராய்வு வலிமைகளே எதிர்த்து வேலே செய்தலில் செலவழிக்கப்படுகிறது. அவ்வாருன வலிமைகள், நீரின் கொந்தளிப்பை யொட்டி அதன் பகுதிகளிடை யேற்படும் சறுக்கலேப் பொறுத்த வலிமைகளும், ஆற்றின் கரைகளேயும் தரையையும் தேய்த்தவாறு நீரோட்டமானது சாய்ந்தபடி செல்லலே யொட்டிய சரிவுறுத்து வலிமைகளுமாம். ஆதலால், ஓரளவுக்கு சாய்ந்துள்ள வழியே ஆருனது பெருக்கிட்டுக் கரை புரண்டோடாமல் செல்ல வேண்டுமாயின், உரைவு வலிமையை எதிர்த்து வேலே செய்யும் ஆற்றலினளவானது, மேட்டினின்று பள்ளத்திற்கு ஒப்பாய் தலேயொட்டி ஆற்று நீரானது இழக்கும் இருப்புத் திறவாற்றலினளவை ஈடு கட்டினவாருயிருத்தல் வேண்டும். இச் செய்தி ஆறு சார்ந்த அமைவலவரால் (River Engineers) கருதப்படவேண்டுவன வற்றில் முக்கியமான தொன்ரும். வரையறையான சாய்வினேடும் ஆற்றில், மலேத் தலேயினின்று கடற் காலடையும் வரை அதன் நீரினது இருப்புத் திறவாற்றலின் இழப்புக்கு ஈடாக உராய்வி கல்களே எதிர்த்து வேலே செய்தலில் செலவழிக்கப்படும் ஆற்றலினளவு பொருந்தி வருமாறு மாடலே யொட்டிய வினுக்கள் அவ்வலவர் முன் தலேப்படுவன. உராய்வி கல்களேப் பொறுத்த ஆற்றல் செலவ்ழிப்பினளவானது, நீரின் இருப்புத் திறவாற்றலிழப்பினளவினும் குறைந்ததாயின், ஆருனது கரை புரண்டோடினவாறு பெருக்கிடுவதாகும்; உராய்விக லெதிர்த்த ஆற்றல் செலவழிப்பு மிகைப்படின், ஆற்றின் கரைகளும் தரையும் நீரால் பேரளவுக்கு அறுக்கப்பட்டு வருமாருயாகும். அமை

வலவர், ஆற்றின் பல பாங்கர்களில் தக்கவாறான அளவைகளைச் செய்தலை யொட்டி, ஏற்றவாறான ஏற்பாடுகளைச் செய்கின்றனர்.

ஆற்றணி அமைவலவர் முன் எதிர்ப்படுகிற மற்ற பொருண்மை யியலான வினுக்கள். ஆற்று நீரானது வளைந்து வளைந்தோடும் போக்கா யிருத்தலைப் பொறுத்தவை. ஆற்றின் பகுதிகளை நேர் வயவையிலாய்த் தொடுத்தபடி தக்கவாறான வாய்க்கால்களை வெட்டி விடலால், அவ்வாறான திரிதருப் போக்கை மறித்துவிடலாம். வாய்க்கால்கள் வெட்டப்படற்கான தக்க செய்திகளைப்பற்றி அமைவலவர் நன்கு ஆராய்கின்றனர். மணற் பாங்கான சமவெளி யொன்றில் பாய்ந்து கொண்டுள்ள ஆற்றின் வழியில் கடினப்பாறை யொன்று அதைக் குறுக்கிட்டிருக்கலாம். அத் தடையைச் சுற்றி வந்தவாறு அதைக் கடந்து செல்லுங்கால், ஆறானது அதன் நேர்பாதை யினின்று ஒதுங்கினவாறு வளைந்தோடுவதாகும். அங்ஙனம் ஆற்றுப் போக்கின் தகவு பிறழ்ச்சியாகும் போதெல்லாம், வளைவின் வெளிவாட்டத்து நீரோட்டவிரைவினளவு, உள்வாட்டத் தானதைவிட மிக்கதாயிருக்கும். எனவே, வெளிவாட்டக் கரை நீரால் அறுக்கப்படுமாறாகும்; உள் வாட்டத்தில் நீரடித்துக்கொண்டு வந்த வண்டல் படிவதாகும். அவ்வாறான வினை நடக்கைகளை யொட்டி ஆறானது வளைந்துபோகும் போதான ஒவ்வொரு தடவையினும், வளைந்த பாதையின் நீட்டலளவும், அதன் வளைவுப் பான்மையினளவும் மிக்கனவாயாகி வருவன. அவ்வவ் வளைவுகளுக்கு முறையே எதிர் முகமாய்த் திரும்பினவாறான வளைவுகளும் கூடவே ஏற்படுவன. அவ்வாறே தொடர்ச்சியாக, ஒன்றுக்கொன்று எதிர்முகமானவாறு யமைந்த வளைவுகளாய்த் திரும்பித் திரும்பிக்கொண்டே பாய்ந்தவாறு, ஆறானது வளைந்து வளைந்து போகிறது. பிறகு, அவ் யாறு அச் சமவெளியை விட்டு நீங்கி, இன்னொன்றினுள்ளாயினும் கடலினுள்ளாயினும் கடமொன்றினூடே (Gorgc) பாய்ந்துவிடும். வளைவுத் திருப்பக் கோணலான (Sinvous) வழியே ஆறானது செல்லலை யொட்டி, வெள்ளத்தின்போது ஆற்றில் நீர்ப் போக்கு ஆங்காங்கு தடைப்பட்டு நின்றுவிடும். ஆங்கெலாம் நீரெழும்பிக் கரைகளை உடைத்துக்கொண்டு புரண்டோடுவதாகும். ஆதலால், அமைவலவர் தக்கவாறுயமைந்த ஆற்றுப் பகுதிகளிரண்டிரண்டானவற்றினிடை முறையே, நேரான வழிகளை வெட்டி விடுகின்றனர். அவ்வாறான திருத்தங்களை யொட்டி மாபெரும் வலிமைகள் அவிழ்த்து விடப்படுவன. ஆற்றை யொட்டிய நீர்ப்பாசனத் திட்டமான அமைப்புக்கள் பல மாற்றிக் கட்டப்பட வேண்டியவாறாகும். எனவே ஆறு செல்லும் வழியைத் திருத்தற்கு முன், அமைவலவர் பலவாறான செய்திகளைத் திண்ணமாய் அறிதற்குத் தக்க சோதனைகளைச் செய்கின்றனர்.

அவ் வமைவலவர் தாம் திருத்த விரும்பும் ஆற்றுப் பகுதியையும் அதன் தொடர்பான பகுதிகளையும் பொறுத்த நீரோட்டவியல், ஆழங்கள், கரைப்பான்மைகள், இன்னோரன்ன நுணித்தல்களை அளவிடுகின்றனர். பிறகு அப் பகுதிகளை வீத மட்டானவாறு (To Scale) ஒத்துள்ள ஈடுப்படிவம் (Model) ஒன்றை அமைத்து, அதில் தமது திருத்தத் திட்டங்களை யொட்டிய மாற்றங்களைச் செய்து, அவற்றை யொட்டிய விளைவுகள் எவ்வாறுயிருப்பன என்பதை உன்னமூன்றிக் காணுவார். அங்ஙனம் அறிந்து கொண்ட செய்திகளை யொட்டி, ஆற்றுப் பகுதிகளில் ஏற்படக் கூடிய பெருந்திட்ட விளைவுகளைப்பற்றி முன்னரே தெரிந்து கொள்கின்றனர்; அவற்றால் கேடு உறுவதாகும் எனக் காணின், திட்டத்தை மாற்றுவார்; மாற்றின திட்டத்தை யொட்டி சோதனை செய்வார்; அங்ஙனமான சோதனைகள் பல செய்து, கேடு நேரிடாவாறான திட்டத்தை அடைவார்; அதை யொட்டிய பெருந்திட்ட வழியே ஆற்றின் போக்கைத் திருத்தும் பணியிலீடு படுவார்.

நீரியக்கவணியையும் (Hydraulic) பயிர்த் தொழிலொப் புரவையும் முறையே சார்ந்த அமைவலவரை இன்று இடருறுத் தும் பெருந்தடைகள் நீரரிப்பையும், அவ்வறுப்பை யொட்டித் தணத்தப்படும் பொருள்கள் நீரோடைகளி னேற்றானவாறு அகற்றப்படலையும், பிற்பாடு, அவ் வோடைகளின் கீழடைவு களிலும், அவை கடலுடன் கூடும் முகங்களிலும் வண்டல் படிதலையும் பொறுத்து ஏற்படுவனவே. இவ்வாறான வினை நடக்கைகள், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தான், போய் (Du Bois) என்ற பிரஞ்சு அமைவலவரால் முதன் முதலாக விதித்திற திட்டவழியே ஆராயப்படலாயின. நீரோட்ட மொன்றால் அடித்துக்கொண்டு போகப்படும் வண்டலின் துல மானது, அவ்வோடையால் அதன் தரை மீது உறுத்தப்படும் சரிவு வலிமையைப் பொறுத்திருப்பது என அவர் கண்டார். தரை யமைந்த சாய்வுக் கோணத்தையும் (Angle of Slope), ஓடை யின் ஆழத்தையும் பொறுத்துச்சரிவு வலிமையின் அளவிருப்பது. போயின் காண்டலான விதி, செவ்வைத் திருத்தமான தொன் றன்று எனப் பின்னர் வந்த ஆராய்ச்சியாளர் காட்டினர். வண்டலின் துலத்திற்கும், சரிவு வலிமைக்குமான வீதயெண் (இது போயி கெழுக்குறி [Coefficient] எனப்படுவது) எல்லா ஓடைகளையும் ஒட்டி ஒரே யளவாயிருப்பது எனப் போயின் விதி கூறுவது. ஆனால் அக்கெழுக்குறியினளவு நீரோடைக்கு நீரோடை வேறுபடுவது எனவும், ஒரே நீரோடையிலேயே பொழுதுக்குப்பொழுது மாறுவது எனவும் இன்று தெளிவுறக் காணப்பட்டுள்ளது.

(தொடரும்.)

பாரதியாரின் பாடற் றிறம்.

K. சோமசுந்தரம் பிள்ளை, B.A., B.L., தஞ்சை.

ஒரு நாட்டின் பொலிவுக்குக் கலை அறிவின் வளனோடு கூடிய நலன் மிக இன்றியமையாதது. இன்பம் தரும் கலை நலன்களுள் சீரியது கவிதைக் கலை யாகும். எல்லாப் பொருள்களையும் ஊடுருவிப் பிணைக்கின்ற ஒற்றுமை நலத்தில் முருகுணர்வு நல்கும் உண்மைப் பொருளை வெளியிட வல்லது கவிதை யாகும். வாழ்க்கைக்கு ஒரு நோக்கமும், குறிப்புடைய சிறப்பும் வாய்ந்துள்ள தென்னும் முருகியலையும் உணர்வையும் தூண்டுவது கவிதை யாதலான், மக்களுக்குக் கைதந் துதவ வல்லது கவிதை யென்பது மறுக்கொணாதது. உளங் கனிந்த போதெல்லாம் விளையுங் கவிதை, நியதி வகுத்து செய்யப்பட்ட செய்யுள் போலல்லாது, புலனறிவுக்கும் பகுத்தறிவுக்கும் மேலாய தொரு காட்சியில் நம்மனதைப் புகுத்தியும், மலர்த்தியும், உயர்த்துகின்றது. எனவே, கவிஞருலகம் கவினுற வாழ, மனத்தின் இயல்பாய் முருகு உணர்வும், அறிவு ஒழுங்கும் கலந்து விளையும் கவிதை இன்றி யமையாது வேண்டப்படு மென்பது அறியப்படும்,

தெளிந்த அமைதி காலத்தில் கவிஞர்கள் திருவளர் தாமரைபோல் முகிழ்ந்து விளங்குவ தியல்பு. ஆனால், புகழுடம்பு பெற்ற சுப்பிரமணிய பாரதியாரோ அக் கவிஞர்களைப் போலல்லாது, இடி மேகங்களுக் கிடையே போர்க் களத்தில் வீறுடன் உலவும் நாட்டுப்பற்று உள் மூட்டிய சினத் தீயும் அளியு முடைய வீரர்போல் விளங்கினர். இவரது வாக்கு இதய வொலி. இதனில் ஆண்மை வீறு பரந்து கிளர்ந் தெழும் பான்மையில் அமைந்துள்ளது. எனினும், காரிருளில் மின்னும் மின்னலைப்போல அவர் உள்ளத்தில் கவிதை எழுந்தது.

இளமைக் காலத்தே, பாட்டினியல் பெல்லாம் இப் புலவர் பால் நாவிலே அமைந்து கிடந்ததால், பாரதியார் என்ற பட்டம் இவரை நாடி வந்தது. இவரது பா வியற்றும் இயற்கை வன்மை, பன் னயங் கெழுமிய பாவின்

விழுப்பத்திற் றிளைத்த பெரும் புலவரையும் இறும்பூ தெய் திடச் செய்தது. இயல்பாக புள்ளினம் பாடுவதுபோல் இசைத்த பாரதியார், சிறிது காலங் கழித்து நாட்டின் நல் லுரிமையினைப் பாராட்டிச் சுதந்திர வுணர்வால் பாடுவா ராயினர். மக்கள் மனதைக் கொள்ளை கொள்ளும் பான்மை யால் இவர் பாடும் தேற்றம், நெருப்பிடை நெய் சொரிந்த தன்மையாய் விளங்கியது.

பாரதியார் இருவகை வாழ்வு வாழ்ந்து வந்தார். ஆனாலும் இரு கவலைச் சுமையுடனும் வருந்தினர். இவர் தம் வாழ்வு துன்பப் புயலில் அலைக்கப்பட்டாலும், இவரது வாழ்வில் நலம் கோடைக் கால இலைகள் போலவும், உதிர் கனி போலவும் போக்கு வரவு முள்ளதாயிருந்தது. இவரது ஊன் வாழ்வில் பொருட் செல்வம் இறைக்க இறைக்க ஊறுதலில்லாது மடைவாய் திறந்த நீர் போல் வழிந் தோடியது. சிறிது எய்ப்பினில் வைப்பாக யிருந்தும், மாற்றற்கரிய மனக் கவலைக்குத் தூதாகநின்று வறுமையினை வளர்த்தது. எனினும் எளிமையே இவரது அறிவாற்றலை மலரச் செய்து பா வாழ்வில் ஆக்கம் அளித்தது. கவலை வாய்ப்பட்டாலும், பாரதியார் நாட்டன்பில் தம் முள்ளத் தைப் பறி கொடுத்து வெறி பிடித்தவர் போல் தனது ஆக்கும் சக்தியினையும், உரம் பெற்ற உணர்வினையும் பிணைத்துக் கவி யணி செய்வாராயினர். இத்தகைய முயற்சி யில் மகிழ்ச்சி முகிழ்த்தல் இயற்கை யாதலின், அம் மகிழ்ச்சி யின் பொங்கலன்றோ இவரது பாட்டென்பது அறியப்படும். கவியின் வாழ்வே வாக்கு என்பது இவர் பால் முற்றும் பொருந்துவதாயிற்று. அன்பும், அமைதியும், தெளிவும், நேர்மையும் இவரது வாழ்வைச் சிறப்பித்து, உள்ளத்தில் மலரும் உண்மையே இவரது புலமையையும் வளர்த்தது.

வண் தமிழ் மொழியின் கண், பாவினங்களின் அமைப்பு பல மலிந்திருந்தும், அவைகளை விடுத்து, பாரதி யார் தன்னுணர்வில் மறைந்து கிடக்கும் முருகியலை வெளிப் படுத்தப் புதிய யாப்புகளையும் மேற்கொண்டதால், இவரது கவிதையில் யாப்பிலக்கணத்து ஒழுங்கு வரம்பும், பயன்றரு சங்கப் பனுவல்களிலூன்றிப் பழுத்த புலமைப் படிப்பில் எழும் நறுமணமும் பெரிதும் காணக் கிடைக்காது. இவரது கவிதை தானகப் பொங்கிப் பொலிந்ததினால், இவர்

கையாண்ட யாப்புகள், அற்புத உள்ளத் துடிப்பினையும், நடை, மின்னல் வேகத்தையும் உணர்த்துவது அறியற்பாற்று. மற்றும் ஆற்றின் சல சலப்பும், பசும் பயிரின் சிலு சிலுப்பும், இலைகள் பழுப்பாகி களித்தேகும் கல கலப்பும் இவரது நடையில் கண்டு இன்புறற் பாலது. அமைதி, சக்திச் சுழல்களின் கிளர்ச்சி, விரைவு, இவரது நடையினைப் பெரிதும் அணியுறுத்துவதாயின.

உள்ளத்தால் உணராவிடின், சுவை கால தாமதப்பட்டுப் புலப்படுமாதலான், அதனை வேண்டாது, சொல்லிய சொல்லே பற்றுக் கோடாகத் தானே உணரப்படும் உவமைச் சிறப்புகளை மின் சக்தியாகக் கவினுறப் பாரதியார் தன் கவிதையில் பெய்து வைத்த அருமை போற்றற் குரியது. தமிழ் மொழிக்கே சிறப்பாக வுள்ள உவமை யணிகளால் இவரது கவிதை மாசற்றும் தேசுற்றும் விளங்குவது,

'திங்களை மூடிய பாம்பினைப் போல செறி குழல்

'விந்தை யுறு காந்தமிசை வீழு மிரும்பினைப் போல்
ஆவலுட னின்னை யறத் தழுவி, ஆங்குனது கோவை யிதழ் பருகி'

'முறத்தி னுற் புலியைக் காக்கு மொய்வரைக் குறப்பெண் போலத்
திறத்தினுல் எளியை யாகி செய்கையால் உயர்ந்து நின்றாய்'

என்பன போன்ற உவமைகளான் அறியப்படும்.

உடலைப் போன்ற உலகமதின் உள்ளத்தில் தமிழ் மக்களுக்கும் ஓர் தனியிடம் உண்டென்பதையும், உடல் வருந்தினுல் உயிர் துன்புறு மென்பதையும் நுணுகி ஆய்ந்து, பாரதியார், ஆற்றலுடைய சுதந்திர வாழ்வின் வளர்ச்சிக்குத் தடையாக வுள்ளது. தாய் நாட்டின் அடிமைப் பிணி எனக் கண்டு தாய் நாட்டின் விடுதலையே நாட்டு மக்களுக்கோர் சிறப்பீனும் முத்தி யின்ப மெனவும், சுதந்திரமே மக்களுயிர் எனவும் முரசு முழக்கினுர். மற்றும் தாய் நாடு தனிமுடியும், செங்கோலும், கலையும், நலமு மிழந்து இழிந்த நிலையில் நிற்பது பொருது, நாட்டுப் பணியில் இறங்கி வாழ்வின் உறுபயனைப் பெற்ருர். வீரத் திருவினர் இத்தகைய வாறு சுதேச வேள்வியினை இயற்றிய ஞான்று, அன்று அலர்ந்த கவிதை மூலம், வேள்விக் கனலை அகந்தனில் அடக்கியும், அஃது அடங்காது வீறுடன் எழுந்து புகைந்த உயிர்ப்பின்

வேகம் நாடெங்கும் பரவியது. சுதந்திரப் பாக்களைக் கேட்ட அளவில் உள்ளம் வீரக் கனல் பெறவே, சுதந்திர தாகமும், கேண்மையும் மக்கள் பால் நிலைத்து நிலவத் தொடங்கியது.

'வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ? என்றும்
ஆரமு துண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ?'

'இதந்தரு மனையி னீங்கி இடர் மிகுசிறைப் பட்டாலும்
பதந்திரு விரண்டு மாறிப் பழி மிகுத்திழி வுற்றாலும்
விதந்தரு கோடி யின்னல் விளைந் தெனையழித் திட்[டாலும்
சுதந்திர தேவி! நின்னைத் தொழுதிடல் மறக்கி[லேனே'

'ஒன்று பட்டா லுண்டு வாழ்வு'

'யார்க்குங் குடியல்லேன்'

'அன்னியர் தமக்கடிமை யல்லவே நான்

'அன்னியர் தமக்கடிமை யல்லவே'

'அடிமைக்குத் தலையில்லை யாருமிப்போ தடிமையில்லை [அறிக!

என்றது போன்ற கவிதை மலர்கள் பூத்து புது மணம் கமழ, தமிழர் புது வாழ்வு வாழ விழைந்தனர். நாட்டன்பில் வீரச் சுவை யின்பம் தோய்ந்து மலர்ந்த பாரதியாரது கவிதை தேசியக் கலை யுணர்ச்சியைப் போற்றுமாறு மக்களைத் தூண்டியது.

பாரதியாரது பாக்க ளெல்லாம் பெரும்பாலும் வீரியத் தினவிலே முகிழ்ந்தன. கவி யமுத ஊற்றா யிருக்கும் இவரது உளத்தில் ஒரு வித சக்திச் சுழல் மறைந்து அமைந்துள்ள தினல், அஃதொடு வீரியத் தினவும் சாருங்காலை, வீர வுணர்வு, கடுஞ் சூறாவளியின் வேகத்தையும் நாணச் செய்யும்படி, உலகின் கண் விளங்கும் வீர நினைவு, வீரச் சொல், வீரியச் செயல் என்பவைகளில் ஈடுபட, அவர் பாலிருந்து விடுபட்டுப் புறம்பே சென்று உலகிசையுடன் பொருந்தி ஓட முற்படுகின்றது. உயிரோட்டமுள்ள இவரது கவி யமுதத்தில் உறுதியான நாட்டுப் பற்றும் உண்மையாய அமைதியும் இழைந்திருப்பதால் அமைதியின்

வேகத்திற்கு முன் சூறுவளியின் வேகம் நில்லாதென்பது கருதுக. இத்தகைய அமைதியின் வேகத்தால் உந்தப்பட்ட பாரதியாரின் பாக்கள் யாவும், யாப்பிலக்கணத் தளையைத் தகர்த்து பெருவாழ்வு அளிக்கும் வீரவுணர்ச்சியினை மேன் மேலெனக் கிளர்ந்து தணியா வேட்கையினை விளைக்கும் தகைமைத்து. பாரதியார் கைக்கொண்ட 'வீரம்' ஒவ்வொரு ஆண்மையர் உள்ளத்தில் வீரக் கனலைப் பொருத்தி, தியாகத் திறமை பெருக, வாழ்வை அருட் சுடராகப் பொலிய வைத்தது. அருள், அன்பின் குழவியாதலால், அருள் வாழ்விலிருந்து சுதந்திர இன்பக் கனி உதிருமென்பது வெள்ளிடை மலை.

சுதந்திர இன்பம் அனுபவிக்கத் தெரியாது, தமிழ் மக்கள் தயங்கும் நிலையினைக் கண்ட போது,

'நெஞ்சம் பொறுக்குதிலையே—இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்'

என்று பாரதியார் கூறுங்காலை, கேட்ட யாவரது உள்ளமும், கண்ணீர் மல்கக், கரைந்துருகும். குடி மக்கள் கூறியபடி குடிமை நீதி வழங்கி, குடி வாழ்வு மேம்படக் குடி அரசியல் வேண்டுமென்ற கருத்து பாரதியார் கொண்டாரெனினும், மக்களுக்குள் வகுப்புக் கலகமின்றி அமைதியும் ஒற்றுமையும் உண்டு பண்ணும் நாகரீகமும், போர்ப் புயலும் இரத்த வெறியுமற்ற அமைதியான உரிமையும், பொதுவுடைமையும் வேண்டுமென்பர்.

'ஏழையென்று மடிமையென்று மெவனுமில்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்ப திந்தியாவி லில்லையே'
'எல்லாரும் ஒன்றெனுங் காலம் வந்ததே'

'எப்பதம் வாய்ந்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கு மந்தநிலை பொதுவாகும்'

என்பவை பாரதியாரின் கருத்தாகும். சாதிசமய வேறுபாடும், சாதி நெறியும், பிணக்கும், பிரிவும், பிளவும் தந்து நாட்டன்பு முன்னேற்றத்திற்குக் குறும்பு செய்து சிறுமை விளைக்கும் தீங்கினைக் காணச் சகியாது பாரதியார்,

'ஜாதி மதங்களைப் பாரோம்'

'எல்லோரு மோர்குலம் எல்லோரு மோர்இனம்'

'ஜாதியிரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ் மகள் சொல்லியசொல் அமிழ்தமென்போம்'

என்ற சொல்லம்புகளால் நீக்க முற்பட்டுநின்று, பார்நலத் திற்குரிய சுதந்திரத்தின் காவலராய்த் திகழ்ந்தார். சாதிப் பேய் விளைக்கும் தீண்டாமைக் கொடுமையினாலும் பெண் ணடிமையினாலும் நாடு பொலிவிழந்திருத்தலைக் கண்டு பொருது, அச்சிறுமைகளைப் போக்க எழுந்த பாரதியாரது பாக்களைப் படிக்குந்தோறும் எண்ணுந்தோறும் மக்க ளுளம் பேரிரக்கம் பூண்டு கசிந்து கரைந்துருகு மென்பதில் ஐயமில்லை. பர்க் (Burke), பிரைட் (Bright) இவர்களின் பேச்சொலியும், பைரன் (Byron) கவிதை ஒளியும் பாரதி யாரது உயிர்ப்பும் ஓட்டமுமுள்ள கவிதையில் காணப் பெறலாகும். சாதிவகுப்பு வேறுபாடிலாது ஒன்றி வாழ்த லாய ஒருமைப்பாட்டுரிமையே பாரதியாரது பாக்களின் பண்பாகும்.

அறிவெனும் அளக்கரை ஆய்ந்தே, கடந்த நாதயோகி யாகிய பாரதியாரது கவிதை உட்சுவை மிக்கது. அதனில் மிளிரும் அறிவு மணிகள் பல.

> 'வீணையடி நீ எனக்கு, மேவும்விரல் நானுனக்கு'
>
> 'நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
> அஞ்சி யுயிர் வாழ்வ தறியாமை'
>
> 'அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே',

பாப்பா பாட்டு, முரசு முதலியன அறிவு செறிந்து அன்பு நிறைந்து இன்பம் பிலிற்றும் தன்மையன வென்பதைக் குறிக்க இரு பாக்கள் சாலும்.

> 'உயிர்களிடத்தி லன்புவேணும்—தெய்வம்
> உண்மையென்று தானறிதல் வேணும்
> வயிரமுடைய நெஞ்சுவேணும்—இது
> வாழும் முறைமையடி பாப்பா'
>
> 'அன்பென்று கொட்டு முரசே—மக்கள்
> அத்தனை பேரும் நிகராம்
> இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
> யாவரு மொன்றென்று கொண்டால்'

இவரது 'கண்ணன் பாட்டு', 'அறிவே தெய்வம்', 'நெஞ் சொடு கிளத்தல்', 'காட்சி', 'ஒளியும் இருளும்', முதலியன இயற்கை எழிலையும், அரிதுணர் பொருட்களையும் நன்கறிந் துணர்ந்து உவமிக்கும் பாரதியாரின் அறிவின் மாட்சியினை விளக்குவதாகும். இவை யாவும் இயற்கை யின்பமூட்டி அமைதிநிலை அளிக்கவல்ல எளிய நடைமுறையில் விளங்கு வதில் இணையிலவாய்த் திகழ்கின்றன. இயற்கையில் உலகை இயக்கும் மூல சக்திகளை வியப்புடன் விவரிக்கும்

ஆற்றல் இவரது பெருமிதத்தைப் புலப்படுத்தும். காவியச் சோலையில் கூவும் இவரது 'குயில்' கற்போர்க்கு மாறுது மகிழ்வூட்டும் திறத்தது.

வழுவிலாச் சொல்லும் பொருளும் காப்பிய உடலென்றும், சுவையே அதனுயிரென்றும் கூறுவது தமிழ் மரபு. இதனையே குறிக்கோளாகக் கொண்டு பாரதியார் காப்பிய உயிரான உவகை, அவலம், சமநிலை முதலாம் சுவைகளை எளிதில் பயக்க, பொருட் புலப்பாட்டிற்கு தடை நிகழா வண்ணம் செவிக்கு இனிமையான மெல்லோசை மிக்க சொற்களைப் பெய்துவைத்து, உணர்வுடைய மக்கள் விரும்பிக் கற்கும் வகையில் 'பாஞ்சாலி சபதம்' எனும் காவியத்தை மின்சார எளிய நடையில் புது முறையில் யாத்தனர். இலக்கண வமைதிகொண்ட சொற்கள் பற்பல காரணங்களான் காப்பியத்தே வழுவுடையனவாகவும் கருதப்படுமென்பதை முதற்கண் உணர்த்தியவர் பாரதியாரே. வெறியும் பரபரப்பும் நிலவிய இவரது காலத்தில் இப் பெற்றிய தாய காவியம் அமைதல் அரிது. இவரது உரைநடையும் கவிதைபோன்று ஆற்றலுடையது. அதனில் கவிச் சுவையும் இனிக்கும். பாரதியாரது சிந்தனைச் சிதர்கள் அதன் கண் சிதறிக் கிடக்கின்றன. இவரது மாண்புறு நூல்களை உள்ளூன்றி உணர்ந்து கற்பார் இவரது புலமை, வியத்தகு மாண்பினைக் கொண்டதெனக் கூற முற்படுவர். ஆனால் அதனை மக்களிற் சிலர் கண்ணிருந்தும் காணார்; சிலர் கண்ணில்லாதும் காண்பர். உள்ளமுருக்கும் பாட்டை இயல்பாகவும், இனிமையாகவும் பாடும் கட்டற்ற புள், விண்ணில் சிறகை அடித்து விரைவாகப் பாடி பறந்து மறைவது போன்று, பாரதியார், கவிதை விண்ணில் ஆர்வ மீதூர, இயற்கை வளத்தையும் மறைக் கருத்துகளையும் நம் நெஞ்சகத்தே பொறித்து, உள்ளமுருகி உவகை மீக்கூர, எளிமையும் விழுப்பமும் தோன்ற, அடிமைத்தனம், மடமையிருள், வறுமைத் துயர், கீழ்மை யுணர்ச்சி இவைகளை வேருடன் அழிக்கவல்ல வீர உரிமையுணர்வும், தளரா உறுதியும் அளிக்கும் பாக்களை இசைத்துத், தமது முப்பத் தொன்பதாமாண்டில் மறைந்தார்.

தமிழர் வாழ்க்கையானது, அன்பை அகத்தும், வீரத்தைப் புறத்தும் காட்டும் சீருலாவிய சிறப்புவாய்ந்ததென்னும் உணர்வைத் தூண்டுவது அன்புறு தமிழ்க் கவிதையின் திருவுள்ளக்கிடை. இதனைக் கருத்துட் கொண்டு தாய்மொழியை அன்பினில் இன்ப உருவாகவும் (அகம்),

அம்மொழி நிலவும் நாடாகிய தந்தையை வீரத்தின் வடிவமாகவும் (புறம்) பாரதியார் அமைத்துப் போற்றி

'செந்தமிழ் நாடெனும் போதினிலே—**இன்பத்**
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே'

எனப் பாடுந்திறன் அஃகியகன்ற அறிவுக் கருவியால் துருவி காண்டற்குரியது. அன்பின் முதிர்வே இன்பமாதலால், தாய்மொழி யன்பை எளிய நடையில் சுவையின்பம் நனி ததும்ப

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்'

எனப் பாரதியார் அகங்குழைந்து இயம்பியதும், தமிழ் மொழியை நீக்கமில் அன்பால் வளர்த்துத் தமிழ் நாட்டில் நிலவச் செய்த புலமைச் செல்வம் வாய்ந்து விளங்கிய வீரப்புலவர்களைப் போற்றுமுகத்தான் தமிழ்நாட்டைத் தந்தையர் நாடென்று கருதி, கவிஞர்

'கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்
கம்பன் பிறந்த தமிழ்நாடு
வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளுஞ் சிலப்பதிகாரம் என்றோர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு'

என மென்மையும் எளிமையும் தோன்ற, நெஞ்சைக் கொள்ளைகொள்ளும் பான்மையில் இசைத்ததும் உற்று நோக்குழி, தமிழர் வாழ்வின் இரு வுயிர் நாடிகள், தமிழ் மொழி அன்பும், தமிழ் நாட்டுப் பற்று மென்பதும், அவைகளை வீரமோடு வீறுகொண்டு பொங்கும் புகழன்போடு போற்றுவது தமிழ் மக்களது தலையாய கடனென்பதும் மறுக்கொணு உண்மையாகும்.

தமிழ் நாட்டுப்பற்றின் சிற்பியாய பாரதியார், தனக்குள்ளாய அறிவாற்றலை வீரம் ததும்பிய சொற்புலமையால், மக்கள் நாகரீக வளனை வளர்த்துத் தமிழுலகு பயன்படும்படி வாழ்ந்து வந்ததால், கலை விளக்கத்தைப் புகட்டும் இவரது பாக்கள், தமிழ்ப் புலமை பெற்றோரால் வேண்டப்பட்டு, நாடு முழுவதும் உள்ளுணர்வோடு முழங்கினால், நாட்டுமக்கள்பால் இன்ப வுணர்வும், வீரமும், தீரமும் வீறுடன் பொலியும் வாழ்வும் தூய்மையுறும்.

கலைமகள் விழா

நிகழும் சருவசித்து, புரட்டாசி, உஅ-ஆம் நாள் (14—10—47) தொடங்கிப் பின் நிகழ்ச்சி நிரலில் கண்டபடி, சங்கப்பெருமன்றத்தில், கலைமகள் விழா நடைபெறுகின்றது.

ஒவ்வொரு நாளும் மாலை 6 மணிக்குத் தொடக்கம்

நாள்.	பெயர்.		பொருள்.
14—10—47 செவ்வாய்	திரு. வித்துவான் க. வெள்ளைவாரணம் ஆராய்ச்சித் துறை, அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.	அவர்கள்	கபிலர் அகவல்
15—10—47 புதன்	,, பண்டித R. P. அமிர்தலிங்கம் பிள்ளை விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.	,,	மூவர் தமிழ்
16—10—47 வியாழன்	,, வித்துவான் மு. அருணுசலம் பிள்ளை விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.	,,	பேராசிரியர் தொல்காப்பியம்
17—10—47 வெள்ளி	,, வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.	,,	சுந்தரர் செந்தமிழ்
18—10—47 சனி	,, வித்துவ, பண்டித B. R. புருடோத்தம நாயுடு பேராசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.	,,	வில்லி பாரதம்

19—10—47 ஞாயிறு	திரு. ந. புட்பம்மாள் சீனிவாசபுரம், தஞ்சை.	அவர்கள்	தமிழ்க் கலை
	,, E. S. வரதராச அய்யர் B. A., ஆராய்ச்சித் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.	,,	தேவர் சிந்தாமணி
20—10—47 திங்கள்	,, வித்துவான் சிவ. பார்வதி அம்மையார் திருவையாறு.	,,	மணிவாசகர் திருவாசகம்
	,, வை. சு. கரும்படுசொல்லி அம்மையார் திருவையாறு.	,,	கண்ணப்பர்
21—10—47 செவ்வாய்	,, அமிழ்தமொழி தி. சோ. சாமிநாத பிள்ளை பெருநிலக்கிழவர், சாத்துக்குடல்.	,,	திருமூலர் திருமந்திரம்
22—10—47 புதன்	,, வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார் திருவையாறு.	,,	இறையனார் களவியல்
23—10—47 வியாழன்	,, வித்துவான் பா. இராசேந்திரன் R. C. உயர்நிலைப் பள்ளி, தஞ்சை.	,,	தேவர் குறள்

மொழி அரசி.

இந் நூலின் முதற் பகுதியாகிய தமிழ்த் தெய்வமாலை என்னும் செய்யுட் பகுதியில் அகத்தியர், கம்பர், வரந்தருவார், கருணைப்பிரகாசர், சிவஞானமுனிவர் முதலிய பழம் பெரும் புலவர்களும், அருட்பா இராமலிங்க அடிகள், மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, திருப்புகழ் தண்டபாணி சுவாமிகள், முதலிய பெயர் பெற்ற இடைக்காலப் புலவர்களும், பெ. சுந்தரம் பிள்ளை, சுப்பிரமணிய பாரதி, கவி குஞ்சர பாரதி, சுவாமி விபுலாநந்தர், ரா. இராகவையங்கார், சுவாமி சுத்தாநந்த பாரதியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், திரு. இலக்குமண பிள்ளை, மறைமலை அடிகள், அரங்க. வேங்கடாசலம் பிள்ளை, சுவாமி அருணகிரிநாதர் முதலிய தற்காலத் தனிப் பெரும் புலவர்களும் ஆக 50 தமிழ்ப் பேரன்பர்கள் இயற்றியுள்ள பாடல்களைக் காணலாம். வேறெங்குங் காணக்கிடைக்காத இவர்களது வாழ்க்கைக் குறிப்புகளும், இப்பாடல்களின் தனிப் பெருமைகளை யெல்லாம் எடுத்துக் காட்டவல்ல முற்குறிப்புகளும் ஆங்காங்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. பாட்டுக்கள் யாவும் மிக எளிதில் யாவருக்கும் விளங்கக் கூடியனவாயிருப்பினும் ஆங்காங்குள்ள அரும்பதங்கள், வரலாறுகள் வேண்டிய குறிப்புரைகளுடன் மிளிர்கின்றன.

தண்டமிழின் பண்டைத் தெய்வத்து இளநலங்களுக்கேற்ற தமிழ்த்தாய் வாழ்த்தும், வணக்கமும், அவளது தெய்வத் திருவுருவும், தனிக்கொடியும், தெய்வப் பிறப்பும், வளர்ப்பும், ஆற்றல் செயலும், மற்றும் பல தெய்வங்களால் போற்றப் பெற்றுள்ள வகையும் இப்பகுதியில் 3500-க்கு மேற்பட்ட வரிகள் உள்ள பலப்பல பாடல்களால் விளக்கப் பெறுகின்றன.

வ. சோ. தியாகராய முதலியார், எம். ஏ., தலைவர்.
க. சண்முகம் பிள்ளை, பி. ஏ.,
க. சு. சிவவடிவேல் உடையார், அமைச்சர்.
சாமி. வேலாயுதம் பிள்ளை, பி. ஏ., எல். டி., நூலாசிரியர்.

அரங்கேற்று விழாக் குழுவினர் 7—10—1947.

பண்டிதமணி
மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்
திருவாசகத் திருச்சதகப் பேருரை
(பக்கங்கள் 467)
விலை ரூபா. எட்டு அஞ்சல் செலவு ரூபா. ஒன்று.
கிடைக்குமிடம்:
பொதிகைப் பதிப்பகம் லிமிடெட், கடலூர் N. T.